
தைப்பாவாய்
ஷேக்ஸ்பியர்
வ. கோ. சண்முகம்

# தைப்பாவாய்!

ஆசிரியர்

'எழுச்சிக் கவிஞர்'

**வ.கோ. சண்முகம்**

தொகுப்பாசிரியர்

**எஸ். ராஜகுமாரன்**

தமிழ்க்கூடம்

* தைப்பாவாய்/ Thaippavai * ஆசிரியர் : வ.கோ. சண்முகம் / Author: Vaa.Ko.Sanmugam * கவிதைகள்/ Poems * தொகுப்பாசிரியர்: எஸ்.ராஜகுமாரன் / Compiling Editor : S. Raaja kumaran * முதற்பதிப்பு: 1978 / First Edition : 1978 * மறு மதிப்பு : 2007 / Re-edition : 2007 * பதிப்பாளர்: பரிமளா ராஜகுமாரன் / Publisher : Parimala Raajakumaran * அட்டை வடிவமைப்பு: சித்தன் கலைக்கூடம் / Wrapper Design : Sithan Kalaik koodam * நூல் வடிவமைப்பு : இரா. செல்வ சுந்தரம் / Book Design : R.Selvasundaram * ஒளிஅச்சு: தமிழ்க்கூடம், சென்னை-17 / Laser Typeset : Thamizk kuudam, Chennai - 17.

பக்கங்கள் 64 / Pages 64

விலை ரூ. 33/- / Price Rs.33/-

**தமிழ்க்கூடம்**

புதிய எண்.14, சிவாஜி தெரு, தி.நகர், சென்னை - 600 017.

செல்பேசி : 98401 24602

**Thamizkkuudam**, New No.14, Sivaji Street, T.Nagar, Chennai -17.



தமிழறிஞர் நூல்கள் நாட்டுடைமை திட்டத்தின் கீழ்,
2007-2008 தமிழகஅரசு நிதிநிலை அறிக்கையின் வாயிலாக
'எழுச்சிக் கவிஞர்' மாவெண்கோ என்ற
வயலூர்சண்முகம் அவர்களின் நூல்களை நாட்டுடைமை
ஆக்கிய தமிழக முதல்வர்
'முத்தமிழறிஞர்' டாக்டர் கலைஞர்
அவர்களுக்கு நன்றி!

## ‘எழுச்சிக் கவிஞர்’

# வ.கோ. சண்முகம்

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | வ.கோ. சண்முகம் |
| புனைப்பெயர்கள் | : | மாவெண்கோ, செம்மல், வயலூர்சண்முகம் |
| பிறப்பு | : | 20.02.1924 |
| பிறப்பிடம் | : | வயலூர் கிராமம், திருவாரூர் மாவட்டம் |
| பள்ளிக்கல்வி | : | போர்டு ஹை ஸ்கூல் - திருவாரூர் |
| கல்லூரிக்கல்வி | : | இண்டர்மீடியட், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சிதம்பரம் |
| படைப்புகள் | : | முரசொலி, திராவிட நாடு, அறப்போர், கலைக்கதிர் |
| பிரசுரமான பத்திரிகைகள் | : | பிரசண்ட விகடன், கண்ணன், விஜயா, தமிழ் சினிமா, கல்கி, கோகுலம், ஆனந்தவிகடன், மாதஜோதிடம், பாலயன் |

கவிதைகளின் காலம் : மரபுக் கவிதைகள் -
1940 முதல் 1980 வரை
புதுக்கவிதைகள் -
1970 முதல் 1980 வரை

நூல் விவரம் : 1.தெற்கு ஜன்னலும் நானும்
(மரபு மற்றும் புதுக் கவிதைகள் தொகுப்பு)

: 2.டாணா முத்து
(சிறுவர் கதைப் பாடல்கள்)

: 3. சின்னப்பூவே மெல்லப் பாடு
(குழந்தைப் பாடல்கள்)

: 4. எதைத் தேடுகிறாய்?
(தத்துவக் கவிதைகள்)

: 5. நடந்துகொண்டே இரு
(இளைஞர் கவிதைகள்)

: 6. மெழுகுச் சிறகுகள்
(மரபுக் கவிதைக் கதைகள்)

: 7. புதிய தெய்வம்
(புதுக்கவிதை நாவல்)

: 8. அன்னை ஒருத்தி
(அஷ்டலட்சுமி காவியம்)

: 9. உப்பு மண்டித் தெரு
(புதுக்கவிதைச் சிறுகதைகள்)

: 10. வென்றார்கள் நின்றார்கள்
(பல்துறை சாதனையாளர்கள் பற்றிய கவிதைகள்)

: 11. தைப்பாவாய்
(மொழி, பண்பாடு சார்ந்த கவிதைகள்)

: 12. பாருக்கெல்லாம் பாரதம்!

| | |
|---|---|
| இலக்கிய நண்பர்கள் | : தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், 'உவமைக் கவிஞர்'சுரதா, கவி.கா.மு.ஷெரீஃப், திரைப்பட வசனகர்த்தா ஆரூர்தாஸ், 'டார்ஃபிடோ' ஜனார்த்தனன், திரைப்படத் தயாரிப்பாளர் இராம.அரங்கண்ணல், 'சின்னக்குத்தூசி' தியாகராஜன் |
| இறுதி வாழ்வும் மறைவும் | : 23.07.1983<br>: தளத்தெரு கிராமம், காரைக்கால் (புதுச்சேரி மாநிலம்) |

# பதிப்புரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியப் பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டு தலைநிமிர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கிறது, 'செம்மொழி' தமிழ் !

திருக்குறளுக்கு இணையாக, ஒட்டுமொத்த மானுட சமூகத்துக்கும் வாய்ந்த அறநூல் உலகில் வேறெந்த மொழியிலும் இல்லை என்கின்றனர் மொழியில் ஆய்வாளர்கள்.

'சங்க இலக்கியம்' போன்ற செறிவான - தொன்மையான படைப்புத் தொகுப்பு, உலகின் எந்தமொழிக்கும் கிடைக்காத பெரும் பேறு எண்ணிப் பளகாங்கிதம் அடைகின்றனர் நம் தமிழ்ச் சான்றோர்!

சிறுகதை, நவீனம், உரைநடை என நமது பல இலக்கிய வடிவங்களும் நமக்கு அன்னிய சீதனமாக்க் கிடைத்தவையே! 'மரபுக் கவிதை' என்னும் இலக்கணக் கவிதை வடிவமே தமிழ் மொழியின் தன்னிகரில்லா சொந்தச் சொத்து.

அவ்வடிவம் பண்டிதர்களால் நீர்த்துப் போகும் அவலம் கண்டுதான் பாரதி 'பாட்டினில் புதுமை செய்!' என்றான். புதிய சொல்லாக்கம், புதிய பாடுபொருள், புதிய புதிய கோணங்கள் என்று 'எழுச்சிக் கவிஞர்' வ.கோ. சண்முகம் 'தைப்பாவாய்' என்ற இந்தக் கவிதை த் தொகுப்பு வழியாக தமிழுக்கு புதிய அணிகலனைச் சூட்டியுள்ளார்!

நேசமிக்க...

எஸ்.ராஜகுமாரன்

# தைப்பாவாய்!

விண்ணார் இருளும் விதிர்குளிரும் போயொடுங்க
மண்ணார் உலகமிது வீழ்துயிலின் சோர்வகற்றிக்
கண்ணாள வந்தக் கனகமணிச் செஞ்சுடரைப்
பண்ணார் தமிழெடுக்கப் பாடிப் பரவுகின்றத்
தண்ணாரும் மெல்லோசைத் தங்கச் செவியுற்றாய்
வண்ணமொளிர் மாக்கோல வாசலெலாம் சீலமுறப்
பெண்ணாம் மதியாய்ப் பிறங்குமொரு சீமாட்டி
எண்ணம் களிக்க எழுந்து வா, தைப்பாவாய்!

முற்றக்கொடி படரும் முல்லைப்பூ கண்சிமிட்ட
வற்றல் பிறையும், வடிபனியும் வாழ்த்துரைக்க
நெற்றித் திருப்பொட்டும், நீள்மார்பின் மங்கலமும்
உற்ற அறங்காட்ட உள்ளறைக்குள் சென்றடைத்துபூ
பற்றும் பெரும்வாழ்வின் பங்காளன் தோள்தழுவிச்
சிற்றரும்பு, வெண்ணகையாள் தேன்கனவைச் சீய்த்ததற்கு
நற்றலமே. ஓடிவா. நாணுறாதே தைப்பாவாய்!

ஆடி விதையாக, ஆவளியின் பின்கன்னிப்
பாடி நடவுசெய் பைம்நாற்றாய், ஐப்பசிமேல்
கூடிவரும் கார்த்திகையிற் கொய்களைகள் தாம்நீங்கி
வாடித் தளராமல் மார்கழியில் தோளுயர்த்திக்
தேதி துடிக்கும் செழும்வையம் காத்ததற்குக்
கோடிப்பொன் முத்தை உமிச் சுவரின் கோட்டைக்குள்
மூடிக் கரந்தே முறுவலிக்கும் நெல்லரசி
நாடியழைக் கின்றாள் நகைத்துவா, தைப்பாவாய்!

கட்டுக் கரும்பு. கனிக்குலங்கள் தெங்கோடு
வெட்டி எடுக்கும் முழு மஞ்சள், இஞ்சியுடன்
நெட்டி வெறும்மலரும் நாள்பூத்தப் பன்மலரும்
தட்டுநிறை கற்கண்டும், தண்ணென்ற வெற்றிலை மேல்
மொட்டுநிகர் பாக்கும் முன்படைத்த மன்றினிலே
வட்டக் கழுத்து, முகம் வர்ணமிட்டப் பூம்பானை
இட்டதிலே பாலூற்றி ஆக்குநெய்த் தீம்பொங்கல்
இட்டுன்னைக் கூவுகிறோம் ஏற்கவா, தைப்பாவாய்!

# கொஞ்ச நேரம் வேண்டும்!

கொஞ்ச நேரம் வேண்டும்! நிலவு
கெஞ்ச நேரம் வேண்டும்
நாளின் துளிகளில்தோளின் களிப்பைக்
கொஞ்ச நேரம் வேண்டும்!

இஞ்சி உறைப்பே வாழ்வின் உறைப்பு.- பழ
எலுமிச்சையின் புளிப்பே, புளிப்பே.
கஞ்சி செரித்த உப்பே, உப்பு. - இதைக்
கண்டு கொண்டால் வராது தப்பு.

கொஞ்ச நேரம் வேண்டும். - அதில்
கூவும் குயிலும் வேண்டும்.
'நெஞ்சம்' என்னும் மாய ஏனம், - கடவுள்
நெடுங்க ரங்கள் தந்த தானம்!

நஞ்சு ஊற்றியே நிரப்ப லாமா? - அதில்
நாளும் அருளை நிரப்ப லாமே?
கொஞ்ச நேரம் வேண்டும் - வாழ்வு
கொஞ்ச நேரம் வேண்டும்.

படிக்கும் தமிழெல்லாம் பாமணமாக - உறவால்
பழகும் சுற்றமும் பூமணமாக
பிடிக்கும்கை என்றுமே திருமணமாக - ஞானப்
பிஞ்சுகள் வாஞ்சைப் பெருமணமாக

கொஞ்ச நேரம் வேண்டும்! - நிலவு
கொஞ்ச நேரம் வேண்டும்!
நாளின் துளிகளில்தோளின் களிப்பைக்
கொஞ்ச நேரம் வேண்டும்!

# ஒற்றைப் பெண்மான்!

தவத்தினால் மெலிந்த மேனி!
தரைபுரளும் அழுக்கு டைகள்!
அவள் துன்பம் கண்ணீர் எதுவும்
அணுகிடா இன்பம் ஒன்றே
உவப்புடன் துய்க்க வந்தாள்,
உலராக துன்பக் கடலுள்
துவண்டனள்! அந்நே ரத்தும்
சுடர் முகத்தால் திசைகள் மின்னும்!

மைப்புகைசூழ் விளக்கே போல;
வளர்பிறையின் துளிரைப் போலக்
கைப்பொருள் குறைந்தாற் போலக்
கலக்கமுறா ஞானம் போல
பொய்ப்பழி தன்னால் குனிந்தப்
புகழினைப் போல; மேலாம்
மெய்ப்பொருள் தொடர்பே இல்லா
வித்தையைப் போல நைந்தாள்!

செவ்வாயின் ஆக்கிர மிப்பால்
திணறுகின்ற ரோகிணி போல;
ஒவ்வாத நம்பிக் கையால்
ஒடுங்குமோர் நட்பே போல;
எவ்வாறும் நிறைவே றாத
இச்சைகள் போல; முகில்கள்
கவ்வியதோர் நிலாப்போ லிருந்தாள்!
கவின்மிகு அன்னம் போன்றாள்!

வெறிகொண்டு மேலே பாயும்
வேட்டைநாய்க் கூட்டத் துள்ளே
உறவினைப் பிரிந்து வந்த
ஒற்றைப் பெண் மானைப்போல
நிறைந்தசூழ் அரக்கி யருக்குள்
நிலைகுலைந்தே அயர்ந்தி ருந்தாள்
குறைவிலாப் பொறையின் மிக்காள்
கோதிலாச் சீதை மாதா!

(அசோக வனத்துள் அருஞ்சிறைப் பட்டு / சோகப் பதுமையாய் துயர்கள் கண்ட / மாதா சீதையை ஒவிய மாக்க / ஆதிகவியாம் வால்மீகி காட்டும் / அற்புதமான உவமைகள் இவைகள்!)

**(1960)**

## மின்னல் கோலம்!

*சின்னப் பூவே சிரிக்கின்றாய்!*
*தெய்வப் பிஞ்சே சிரிக்கின்றாய் - !*
*என்ன எண்ணிச் சிரிக்கின்றாய்?*
*எதனைக் கண்டே சிரிக்கின்றாய்?*

*தென்றல் இளைத்த மலர்ச் சிரிப்போ?*
*சீத நிலவின் பளபளப்போ?*
*என்றும் சாகாக் கங்கையிடம்*
*இரவல் வாங்கிய சலசலப்போ?*

*'கொடுத்ததை' எண்ணும் பூரிப்போ?*
*'கொண்டதைக்' கணக்கிடும் பெருமிதமோ?*
*'அடுத்ததை' நோக்கும் எதிர்பார்ப்போ?*
*'அறுத்ததை'க் காக்கும் குதிர் வைப்போ?*

மின்னல் கைகளின் கோலமதோ?
விண்ணோர் படிக்கும் நூலகமோ?
முன்னால் உணர்ந்த வேகமதோ?
முழுதும் அறியாத் தாகமதோ?

எத்தனை எத்தனைக் கதைத் தொகுப்போ?
இதய ரகசியப் புதையல்களோ?
வித்தை செய்யும் வித்தகமோ?
வேதம் பெய்யும் தத்துவமோ?

ஆடி ஆடிச் சிரித்திடுவாய்!
ஆத்மப் பூவாய்ச் சிரித்திடுவாய்!
வாடிச் சுருளா வாழ்வூடே
வசந்தக் கனவாய்ச் சிரித்திடுவாய்!

# ஆவப்பிறந்தது தமிழே!

வாழப் பிறந்ததும் தமிழே!
வையக் கலைகள் அணைத்தும் பூண்டு- (வாழப்...)

ஏழாம் இசையும் இயலும் கூத்தும்
இணைய இழைய ஏற்றுச் சேர்த்து
ஆழக் கடலின் முழக்கத் தோடு
ஆர்த்து ஆர்த்து ஆர்த்து நீடு- (வாழப்)

நீதி தந்ததும் தமிழே!
நிகரும் எதிரு மில்லாக குறளின் - (நீதி...)

காதல் அகமும் வீரப் புறமும்
கற்புக் கனலின் சிலம்புத் திறமும்
மாதர் ஏத்தும் மணியின் அறமும்
வழங்கி வழங்கி வழங்கி நிறைய - (நீதி...)

ஆளப் பிறந்ததும் தமிழே!
அவனி முழுதும் திகழ்ந்து கமழ்ந்து - (ஆளப்...)

மூளும் கயமை சூழ்ச்சி கொன்று
மோதும் தடைகள் வீழ்த்தி நின்று
வாளும் ஏந்திப பகையை வென்று
வளர்ந்து வளர்ந்து வளர்ந்து என்றும் - (ஆளப்...)

வாழப் பிறந்ததும் தமிழே!
வையக் கலைகள் அனைத்தும் பூண்டு - (வாழப்...)

# அப்படியோர் காலம் வேண்டும்!

அப்படியோர் காலம் வேண்டும்
அடுக்களைத் தெய்வ மெல்லாம்!
உப்பினில், உரப்பில் கூட
ஒழுங்கினை, அடக்கம் தன்னைத்
தப்பின்றிக் காட்டிக் கற்புத்
தர்மத்தை அறத்தால் நிறுவி
மப்பிலா நெஞ்சால் வீட்டை
மகிழ்வித்த காலம் வேண்டும்!

இப்படியோர் காலம் வேண்டாம்!
இராணுவ விறைப்பி னோடு
தொப்புளும் மார்பும் துருத்தி
தொடைகளை வெளிச்சம போட்டு
செப்புருச் சிலைகள் போல
தெருவீதி சிரிக்கச் சுற்றி
'பப்பர பர' வென்றே ஆகும்
பதிதைகள் காலம் வேண்டாம்!

அந்தநாள் ராமன்; வைத்தா;
ஆறுமுகம்; காதர், பீட்டர்
பந்தியாக அமர்ந்த டங்கிப்
பாங்காகப் பதவி சாகச்
செந்தமிழ் நாவ சைத்தே
செழுமையாய் 'ஆஆ' கற்று
அந்தமிலாக் கல்வி ஞானம்
அடைந்ததோர் காலம் வேண்டும்

இந்தநாள் ஆனந்த், பாஸ்கர்,
இளங்கதிர்; சங்கர்; மோகன்
சிந்தையைச் சினிமா வாக்கி;
செய்கையைப் அரசிய லாக்கி
சொந்த்த்தை 'ஹிப்பி' யாக்கி;
சோதரத்தை வினாக்குறி யாக்கி
நொந்தழியும் கல்விச் சாலை
நுழைந்தாடும் காலம் வேண்டாம்

அப்படியோர் காலம் வேண்டும்
அன்பறிவைத் தெய்வ மாகத்
துப்புரவாய் போற்றி நம்பித்
துதித்தருள் வரங்கள் கேட்டே
முப்பாலின் நெறிகள் கண்ட
முதுமையை மதித்த; மதத்தின்
ஒப்பனைகள்; நெருக்கல் இல்லா
உயர்பக்திக் காலம் வேண்டும்!

முப்பத்துக் சொச்சம் கோடி
முழுமையும் ஒன்றே யாகி
உப்புக்கும் உதிரம் ஈந்தே
ஒளிமிகும் சுதந்தி ரத்தை
எப்படியும் அடைவோம் என்றே
எக்காளம் ஊதிப் பாய்ந்த
அப்படியோர் காலம் வேண்டும்
ஆவேசக் காலம் வேண்டும்!

இப்படியோர் காலம் வேண்டாம்
இனம்ஜாதி மதங்கள் பேரால்
கொப்புளம்போல் கட்சி நூறு
கொடிதூக்கி ஜனநா யகத்தை
அப்படியே தலை கீழாக்கி
அராஜக அணி நடத்தும்
உப்புகின்ற வீரர் கும்பல்
உலாவரும் காலம் வேண்டாம்!

ஒருகுவளை நீரா காரம்,
ஓரைந்து ரூபாய்க் குள்ளே
அருமையாம் வைட்டமின்கள்
அடக்கியுள ரகசி யத்தை
அறிந்தவர்போல் தினமும் அதனை
அதிகாலைப் பருகிச் செழித்த
பெருமக்கள் ஆரோக் கியத்தைப்
பேசுமோர் காலம் வேண்டும்!

ஒரு பக்கம் விடியு முன்னே
ஒருபாட்டில் புளிக்கும் மதுவை
நரிக்கறி ஆம்லட் டோடு
நாஷ்ட்டாவாய்ப் போணி செய்தே
நரை, திரை மூப்பு நோய்கள்
நாலாறு வயசுக் குள்ளே
விரைவாகப் பெற்றே குலையும்
விபரீதக் காலம் வேண்டாம்!

முக்காலணா சாம்பார் சாதம்!
மூன்றணாவில் முழுச்சாப்பாடு,
தக்காளி ரசவடை; அப்பளம்;
தயிர்துவையல்; பாயசத் தோடு;
உட்காரச் சொல்லும் சர்வர்
உபச்சார நேர்த்தியே நேர்த்தி!
அக்கால உணவகம் கூட
அன்புக்கோர் பண்ணை ஆச்சு!

இருபது பைசா வுக்கே
இலைச்சருகு கிடைக்க வில்லை!
அறுபது பைசா வுக்கோ
அஞ்சாறு பக்கோ டாக்கள்!
வருவோர்கள் நிற்க வேண்டும்!
வந்ததையே 'தள்ள' வேண்டும்!
இரைச்சலோ மீன்சந்தைபோல்
இப்படியோர் காலம் வேண்டாம்!

'எருதின் பின்னே உலகம்'!
என்றிடும் வள்ளு வத்தின்
தாரகம் உணர்ந்தே வாழ்வைத்
தரிசாக ஆக்கி டாதோர்
ஓரணியாய்த் திரண்டு கூடி
உள்ளார்ந்த அமைதி; அன்பை
சீர்ததும்ப வளர்த்த அந்தத்
தெய்வீகக் காலம் வேண்டும்!

# இன்னுமோர் சுதந்திரம்!

வெள்ளியின் கொடியைக்
கீழே வீழ்த்தி
வீர சுதந்திர
தனிக்கொடி ஏற்றி
இமய பூமியில்
இருபத்தைந் தாண்டுகள்
பகலாய் இரவாய்
பறந்து விட்டன!

இருப்பினும் என்ன...?
இன்னுமோர் சுதந்திரம்
எட்டியே உள்ளது!
எங்கோ உள்ளது!
சமுதாய மேடுகள்
சரிவுகள் நீங்கி
நினைப்பில் நீதியில்
நிரவல்-பரவல்
ஏற்பட வேண்டும்!
ஏற்றம் அதுவே!

வெள்ளையன் அகன்றும்,
விலங்குகள் அறுந்தும்
நமக்குக் கிடைத்த
'நாட்டாட்சி' ஒன்றே
'விடுதலை' ஆகுமா..?
வேறொன்றும் இல்லையா...?

பொருளா தாரத்தின்
புதிய வடிவமே
இன்றைய பாரத
இலட்சியப் பசியாம்!
இரவல் மூளையும்,
யாசக நிதியும்
பொருளா தாரத்தைப்
புடைக்கச் செய்யினும்
இரவல் இரவலே!
யாசகம் இழிவே!

சுதேச உணர்வு,
'சுதந்திரப் பிரக்ஞை'
'ஜனகண மன'த்தில்
'ஜெய்ஹிந்த்' அளவில்
உதட்டோர சுலோகமாய்
ஒலித்தால் போதுமா...?

விழிக்கும் சூரியன்
படுக்கும் வரையில்,
பாரத சுவாசம்
பாரம் பரியத்தின்
அழுத்தத் தோடே
ஆவேசத் துடனே
இயங்க வேண்டும்!
இழைய வேண்டும்!

கலையில்; தொழிலில்
கலப்பையில் எல்லாம்
எங்கும்; எதிலும்
'இந்திய ரத்தம்'
உலவிட வேண்டும்!
உயர்த்திட வேண்டும்!

விதேச சரஸ
ஆலிங்கன லீலைகளின்
அட்ட வணைகளை
மெல்ல மெல்ல
வெட்டி எறிந்தே
'நாமே நமதில்'
நிறைவது ஒன்றே
உத்தம அழகுறும்
உறுதியாம் சுதந்திரம்!

'இருட்டு கஜானா'ப்
பூட்டுகள் தெறிக்க
'கருப்புத் தராசு'களின்
கைகள் முறிந்த
அசையாக் குன்றுகளின்
அடுக்கு களாகப்
பொற்குவை உயர்ந்தப்
பொருளா தார
எழுச்சியே, செழுமையே
அரசியல் சுதந்திர
அடிக்கற் களாகும்!

அதுவே தேவை!
அவசரத் தேவை!
இந்த - இனிய
வெள்ளி வருட
விழாக்களில் எல்லாம்
வேள்வியாய், விதைகளாய்
சுதேச உணர்வையே
தாரக மாக்குவோம்!

*(1973)*

# இளைத்த நிழலில்...

காதல் ராணிகள்!
கண்ணீர்ச் சிலைகள்!
சாதல் அடைந்தே
சாந்தியைக் கண்ட
அழயாப் பெண்மைகள்!
அழகுப் பொம்மைகள்!
நித்தியப் புதுமையும்
நீண்ட புகழும்
மெத்தவும் கொண்ட
காவியக் கன்னிகள்!

'அனார்க்கலி' 'லைலா'!
'ஜூலியட்டே என்பது
உங்கள் பெயர்கள்!
பூனைகளை இப்படியா
பிள்ளைகள்போல் வளர்ப்பது?

இப்படியா பெயர்கள்
இடுவ தென்றே
கேட்பவர் உள்ளார்!
கேலிகள் செய்தே
வீட்டை விட்டே
துரத்துங் களென்றே
தூற்றுவோர் உள்ளார்!

துரத்தி யடித்தும்
திரும்பியவர் நீங்கள்!
தேடாமல் வந்தீர்!
செல்வங் களானீர்!
பாடாமல் கிடக்கும்
பண்களை உசுப்பினீர்!.

பணத்தின் மேட்டில்
படுத்துப் புரளும்
குணத்தில் அழுக்குப்
பாசி பிடித்தோர்
உறவுகளாய் எம்மை
உணரவே மறுத்தக்
குறைகள் உங்களால்
குறையவே கண்டோம்!

உங்கள் உறவுகள்
எங்கள் அளவில்
தங்கப் புதையலாய்
வாய்த்தது உண்மை!

உங்கள் உறவுகள்
ஊமைக் காவியம்!
எங்கள் இதய
மௌனச் செருக்கு!
மெல்லிய நாக்கின்
'மியாவ்மியாவ்' அன்றி
சொல்லோ, பாஷையோ
வேறெதும் இல்லை!
பயந்திடும் போதும்
பசித்திடும் போதும்
நயமாய் ஒலிக்கும்
'மியாவ்! மியாவ்!' தானே!

பேசப் பேசியே
பெற்ற வினாடிகளைத்
தூசாய்; நஞ்சாய்
ஆக்கு கின்ற
மனித நாக்கின்
மோசடிகள் எல்லாம்,
இனித்திடும் ரோஜா
இதழ்களை அரைத்து
தட்டியே வைத்தது
போல இருக்கும்
குட்டி நாக்குகளில்
கொஞ்சமும் இல்லை!

தனக்குநிகர் யாரென
தருக்கிடும் மனிதனின்

மனக்கு முப்பமும்
கோணல் புத்தியும்
ஓசை வடிவில்
உலவிடும்! ஆனால்
ஆசை களுக்கும்
அவசியங் களுக்கும்
உங்கள் 'மியாவ்' களில்
உருவங்களே இல்லை!
எங்கும்; எதற்கும்
ஏகசொல் 'மியாவ்தான்'!

நீங்கள் நினைப்பதை
நீங்களே அறிவீர்!
தூங்காமல் தூங்கும்
சுயதவம் உங்கள்
பாரம் பரிய
வரப்பிர சாதமாம்!!
ஆரம்பம் முடிவு
எதுவும் இல்லா
'இருட்டும்' 'மௌனமும்'
இரட்டைச் சுகங்கள்!
திருட்டும் காமமும்
தேடும் பாதைகள்!
'இருட்டை' விழிகளால்
'மௌனத்தை' நாக்கால்
சிருட்டித்துக் கொள்ளும்
திறமையும் பெற்றீர்!

சின்னவள் ஜூலியட்
கருப்பு உடம்பி!
இன்னும் சிறிதும்
வளரவே இல்லை!
மூங்கில் பிளாச்சிபோல்
மெலிந்த கால்கள்!
ஏங்கும் விழிகள்
இரக்கும் பார்வை!
பாதாள வகுப்பில்
வாடி வதங்கும்
நாதிலாப் பாட்டாளிச்
சோதரன் போன்றவள்!

'பஞ்சுப் பொம்மை'
போன்ற லைலா
கொஞ்சும் குரலும்
கால்வாசி தானே?
அழகும், அமைதியும்
ததும்பும் கவிதை!
பழகும் பாங்கிலும்
அவளே அரசி!
அனார்க்கலி அவளோ
அதிகாரி போன்றவள்!
தனக்கென்றே வாழும்
சீமானை நிகர்த்தவள்!

நூறுடன் ஐம்பது
தேதிகளுக் குள்ளே

பேறாய் உங்களைப்
பெற்ற அன்னை
நாழிகை தோறும்
நக்கி நக்கி
'வாழும் தாய்மை'க் கோர்
வடிவம் போல
பாலைக் கொடுத்தவள்
பாசம் வளர்த்தவள்
சோலைப் புதருக்குள்
தொலைந்தே மறைந்தாள்!

பெற்றவள் உறவும்
அற்றுப் போனீர்!
மற்றவர் துணையே
வேண்டித் தவித்தீர்!
அகதி களாகவும்
அதிதி களாகவும்
புகுந்தீர் எம்மனை!
புகலும், பெற்றீர்!
ஏழை எங்கள்
இளைத்த நிழலில்
வாழ வந்தே
ஒட்டிக் கொண்டீர்!

இரவல் பிள்ளைகளை
எடுத்து வந்து
'இரவும் பகலும்'
தொட்டில்கள் ஆட்டி

வளர்த்துவர் நாங்கள்!
வஞ்சகம் ஒன்றே
குளுமைப் பரிசாய்
அவர்களால் கொண்டோம்!
உறவாய் வாய்த்ததும்
உண்மை யற்றதாய்;
முறையாய் வளர்த்த
நட்புகளும் முறிந்து,

கசந்து போன -
கசங்கிப் போன -
அசந்து போன -
இதயத் துள்ளே
புதிய உறவை
பூக்கவே வைத்தீர்!

விதியின் மிச்சமோ?
விளங்கவே இல்லை!
'மிருக வாஞ்சை'யை,
'மனிதச் சூதை'
புரிய வைத்தப்
பள்ளியும் ஆனீர்!
நால்வருடனே
மூவராம் நீங்களும்
மேல்க ணக்காக
வீட்டுக் குள்ளே
வாழ்வு காணவே
தங்கி விட்டீர்!

கூழே யாயினும்
பகிர்ந்தே குடிப்போம்!
மகிழ்வும்; நெகிழ்வும்
மருந்தும்; விருந்தும்;
புகழும்; இகழும்
நீங்களும் பெறுவீர்!

இந்த உறவு
இனிய உறவாய்
எந்த நாளும்
இருக்க வேண்டும்
தயையும் அணைப்பும்
தாய்க்கரங் களாகும்!
இயைந்த நீங்களும்
இதிகாசம் படைப்பீர்!

('மயிர்ப்பூ மழலை'களாய் வீட்டில் வளர்த்த செல்லப் பூனைகளைப் பற்றி, கவிஞர் ஆசையாய் வார்த்த கவிதை இது.)

(1974)

# கன்னி

உதயங்காணாத் தாமரை நான்!
ஒளியை உமிழா வைரமும் நான்!
இதயம் என்னும் கலசமுண்டு; - அதில்
இன்பமதுவோ துளியுமில்லை!

ஏற்றிவையா தீபம் நான்!
எழுதி முடியாக் காவியம் நான்!
காற்றின் செல்வத் தென்றலுண்டு - அது
கமழ்ந்து தவழ்ந்திடச் சோலை இல்லை!

மலையைத் தழுவாக் கருமுகில் நான்!
இலைகள் விரித்த பந்தியுண்டு; - அதில்
மாலை யாகா அரும்புகள் நான்!
இன்னமு தின்னும் படைக்கவில்லை!

ஆடிப்பறக்கா இளமயில் நான்!
அணைத்து மீட்டா வீணையும் நான்!
கோடித் திரவியப் பேழையுண்டு; - அதைக்
கொண்டு போகவொரு ‘ஏழை’ இல்லை!

முழுதும் வளராக் குளிர்பிறை நான்!
முற்றி அறுக்கா விளைச்சலும் நான்!
தொழுது வணங்கிடக் கைகளுண்டு; - அவற்றின்
‘துதி’யினை ஏற்கவொரு ‘தெய்வ’ மில்லை!

(1955)

# விந்தை!

'வஞ்சி!' யென நானழைத்து
வாயூற நெருங்குகையில்
அஞ்சியவள் ஏன்ஓட வேண்டும் ? - அச்
சஞ்சலமே என்னுள்ளத்தைத் தீண்டும்!

கொல்லையிலே கிணற்றடிக்குக்
குடமேந்திப் போகையிலே
'மெல்லியலே நில்லடியே!' என்றால் - ஏன்
சொல்லெதுவும் கூறாமலோடு கின்றாய் ?

செம்பவள இதழ்களிலே
தேன்முல்லைச் திரிப்புதிர
வம்பளந்து குதிப்பாளே அன்று! - அந்த
'ஜம்ப'மெலாம் காணோமே இன்று ?

'அத்தானே' என்றழைத்து
ஆவலுடன் ஓடிவரும்
'பித்தான' நெஞ்சதுவும் போச்சோ' காதல்
வித்ததுவும் கருகிமக்க லாச்சோ ?

கோலமிடும் பொழுதினிலும்
குனிந்த தலை நிமிர்வதில்லை!
ஓலமிடும் விஷ உலகின் சதியோ ? - அன்றிக்
காலமிடும் நாணமதின் விதியோ ?

பிள்ளைச்சிறு பிராயத்திலே
பிஞ்சுமனப் பாசமெழத்
துள்ளிவந்ததே எனையணைத்துக் களித்தாள்! - அக்
கள்ளியதை இன்றெங்கே ஒளித்தாள் ?

சொன்னவைகள் மறந்தாளோ ?
சொப்பனமாய்த் துறந்தாளோ ?
என்னவிதம் நானறிவேன் சிந்தை ? - அவள்
புன்னகையும் புரிவதில்லை; விந்தை !

(1959)

# திருமணம்

துடிக்கின்ற இளமைக்கும்
சுவைகேட்கும் இதழுக்கும்
'கடிக்கும் கன்ன' லென்று
காலம் தருவதெது ? - வாழ்வின்
முடிக்கு மணியாக - காதல்
முடிக்கும் திருமணமே!

உயிர்தேடும் முதல்இன்பம்
உளம்தேடும் நல்லுரிமை
பயிராக வளர்த் தென்றும்
பசுமை தருவதெது ? - பருவத்
துயர்போக்க - அமையும்
தூய திருமணமே!

ஒருமையெனும் நெருப்பவித்து
உடற்பசியைத் தவிர்த்திடுமோர்
அருவிருந்தாய்இனிப் பூட்டி
அமைதி தருவதெது ? - புவியில்
ஒருவன் ஒருத்தியுடன் - அன்பால்
ஒன்றும் திருமணமே!

நல்லறமாய்; உலகுய்ய
நலம்விளையும் கழனியதாய்
தொல்மறை யாம்தமிழ்க் குறளும்
சொல்லிப் புகழ்ந்ததெது? - உயர்வாம்
இல்லறமே எனவிளக்கும் - இளமை
இன்பத் திருமணமே!

# நோவு தீர நூறு முத்தம்...!

(கிராமியப் பாடல்)

அவன்: பொளவு கொண்டா மாரி யம்மா
பொளவு கொண்டா மாரி!
விளுந்து விளுந்து உளைச்ச தில்லே
மேலு காலு நோவுது!

அவள்: வச்ச கஞ்சி ஆறி அங்கே
வாளைத் தண்டாக் குளிருது!
இச்சைப் பேச்சுப் பேசிக் கிடக்க
இந்த நேரம் ஆவுமா ?

அவன்: கஞ்சிக் கிஞ்சிப் பேச்சை இப்போக்
காது கேக்க மறுக்குது!
கொஞ்சிப் பேசி ரெண்டு பேரும்
ருசியா இருக்கத் தோணுது!

அவள்: கையை காலே ஆட்டிக் கிட்டு
கண்ணை ரவையா சொளட்டுறே!
பையப் பையக் கிட்டே வந்து
பாயைத் தட்டிப் போடுறே!

அவன்: நேத்துப் பாத்தக் கூத்து வந்து
நெஞ்சு முழுக்க நிக்குது!
ராத்திரி முழுசும் நாமும் அந்த
'ராசா - ராணியா' ஆவணும்!

அவள்: மீசைக் கார மருதை மச்சான்
மிஞ்சிப்போவுது காரியம்!
ஆசை ஏறி நீயும் ஒடம்பு
அவலு அவலா இடியறே!

தலைக்கு நல்ல எண்ண தேச்சுத்
தளத ளக்கக் குளிச்சிட்டேன்!
பொளைச்சிக் கிடந்தா நாளை ராவுக்
பூவை பூச்சி மிதிக்கலாம்!

அவன்: பணத்தைக் காச மாத்திக் கொடுத்து
பாசம் வாங்க முடியுமா ?
கிணத்துத் தண்ணிக் கணக்கா நீயும்
கிடக்கக் கவலை ஏனடி?

பூவுத் தும்ப நெலவு கீளே
பூத்த மொகத்தைக் காட்டிகிட்டு
நோவு தீர நூறு முத்தம்
நொங்கு போலக் கொடுத்திடு!

# சூனியத்தின் ஓவியத்தில்...!

கோடிக் கோடிப் பண்ணெடுத்தே
குரல்கள் வந்து பாடிடினும் - கண்ணே,
ஓடித் தேடித் தென்றலே
ஊமையாகி ஓயுது! - உன்னால்
ஊனும் கனலாய்க் காயுது!

விளக்குத் துப்பும் ஒளிமழையில்
விண்ணும் கூடத் தோயுது! - கண்ணே,
வளர்க்கும் இருளில் ஒருமனையின்
வாசல் மட்டும் புரளுது! - உன்னால்
வாழ்வு மொட்டும் கருகுது!

தொட்ட மேனி அணுக்களிலே
தூங்கா வெம்மை அடிக்குது! - கண்ணே
விட்ட வெறுமைத் நடிப்பதனால்
விழியின் வறுமை தடிக்குது! - உன்னால்
வெற்றுக் கனவும் அடிக்குது!

சூனியத்தின் ஓவியத்தில்
சொர்க்க பொம்மை முளைக்குது! - கண்ணே
தேனினிக்கும் கவிதையலை
சிந்தும் தண்ணீர் தெளிக்குமோ ? - உன்னால்
ஜீவ சுருதி ஒலிக்குமோ ?

# முதலைக் குளம்!

‘தாய் அகல மகள்’ வந்தே உயிர்த்தொடரில் மீண்டும்
‘தாய்மை’ யினை ஏற்றருளும் நியதியதே இயற்கை!
காயகல்பம் வைத்துண்டே ஒரு ‘மகள்’தான் என்றும்
‘கன்னி’ எனும் நிலைமாறா எழில்மினுக்கி நின்றால்
தூயபெரும் பரிணாமம் உயிர்த்தொகையில் உண்டா?
துளிரின்றி, முகையின்றி ‘பழுப்புகளே’ வாழும்
நியாயத்தைப் புல்பூண்டு தருஇனத்தில் கூட
நாம்காணும் முறைமைஇலை; கொடுமைஇலை! மெய்யே!

பாடாத புதுக்குயில்கள் பாடுவதற்கு வந்தால்
பருவத்து வசந்தந்தான் வெறுப்பதுவும் உண்டோ ?
ஆடாத கவின்மயில்கள் ஆடுதற்கு வந்தால்
ஆகாயக் கருமுகில்கள் அகன்றோடல் உண்டோ ?
மேடாகப் புகழ், செல்வம் குவித்துவிட்ட பின்னும்
மிச்சமின்ற சுகபோகம் துய்ந்துவிட்ட பின்னும்,
‘காடாக’க் கலைத்துறையை ஆக்கிச் சில பேரே
கரடி, புலி சிங்கமென உலவிடுதல் நன்றோ ?

முகச்சவர சுகத்திற்கும் ஒருநாளே ஆயுள்!
முறைகேடாம் மதுவுண்டால் மூன்றுமணி 'சுகமே'
அகம்தழுவி உறவாடும் அழகிளமை மங்கை
அளிக்கின்ற மோகசுகம் அறுபதுநா ளென்பார்!
பகல்கசந்தால் இரவுவந்து பால்நிலவு தெளிக்கும்
பான்மைக்கும் பனிரண்டே மணிப்பொழுது! ஆனால்
தகவிழந்த முதிர்ந்தபெரும் கலைஞர்கள் இன்னும்
'சக்கரத்தை உருட்டுவது' விந்தையிலும் விந்தை!

தேமாவின் கனிகூட தினம்தினமும் தின்றால்
திகட்டுவதும் கசப்பதுவும் பொதுவான இயல்பே! - வீணே
'சாமானியர், பொதுமக்கள் விரும்புகிறார்' என்ற
சாக்கொன்றை மிகையாக்கிச் சிலகலைஞர் நிழலில்
நாமாவளி பாடுவதே கலைவளர்ச்சி என்றால்
நகைப்பவரே ஏராளம்! ஏராளம்!! - இந்த
'மாமாங்கக் கலைஞர்' களால் கலைத்துறையே இன்று
வளப்பிழந்து கிழடுதட்டி வாடிவிழ லாச்சே!

'மாற்றந்தான் வாழ்வினுக்கே மண'மாகும் என்பார்!
'மாறுதலே புதுச்சுவையின் கருவாகும்!' என்பார்!
தோற்றத்தில், தோரணையில், அணிஉடையில் எல்லாம்
சுடர்வீசும் கவர்ச்சிக்கே 'மாற்றந்தான்' மையம்!
ஊற்றாகக் கற்பனைக்ள பொங்கிவரக் கலையின்
உருமாறிப் புதுத்தடத்தில் கால்வைக்க வேண்டும்!
'நேற்' றதுபோய் 'இன்று' வந்து 'நாளை' என ஆகும்
நிலையன்றோ புவியோட்டப் புதுமைகளின் சித்து!

'புத'னுக்குப் பின் 'வியாழன்' வந்தாக வேண்டும்!
பொன்னாளாய் அந்நாளைக் கொண்டாட வேண்டும்!
இதமான - முறையான கலைமலர்ச்சி இதுவே!
ஏங்குகின்ற - அஞ்சுகின்ற இளையதலை முறையின்
மதலைகளும் கலைப்புனலில் இணைந்தாட வேண்டும்!
வாழுகின்ற - வளர்கின்ற கலைத்துறையைச் சிலரே
'முதலைக்குளம்' ஆக்குகின்ற நிலைநீண்டால் - காலம்
மோதிவிடும்! முதலையோடு குளம்தூ ர்ந்தே போகும்!

**(1964)**

## பங்குனி!

கற்றடங்கிய ஞானமோ? - உள்
கனலடங்கிய மோனமோ?
விற்றடங்கியக் கடையதோ? - தன்
வினைமுடித்திடும் 'பங்குனி'!

மடியடங்கியப் பசுவதோ? - கிழ
மாதவளின் கொசுவமோ?
நடைநிறுத்திய பயணமோ? - கடை
நாளடைந்திடும் 'பங்குனி'!

கடலைடையும் நதியதோ? - விழாக்
கலைமுடிக்கும் அரங்கதோ?
உடல்விடுக்கும் உயிரதோ? - பனி
ஓய்ந்தடங்கும் 'பங்குனி'!

படி உடைந்த ஏணியோ? - புனல்
பாழ்த்ததொரு கேணியோ?
முடிவடையும் கதையதோ? - ஆண்டை
மூட வரும் 'பங்குனி'!

படை இழந்த வீரமோ? - அருட்
பதமிழந்த ஈரமோ?
விடை கொடுக்கும் கரங்களோ? - குளிர்
விசையொடுங்கும் 'பங்குனி'!

ஆண்டிரண்டின் பாலமோ? - வசந்த
அழகுவரும் சாலையோ?
தூண்டிடாத தீபமோ? - புதிர்
சொல்ல வரும் 'பங்குனி'!

கதிர் அறுத்த வயலதோ? - வெளிக்
காற்றிளைத்தப் புயல்தோ?
சதிர் நிறுத்திய கால்களோ? - ஒரு
தாய் நிகர்த்தப் 'பங்குனி'!

## கோடை!

நெடியநின் பாதையில் நெருப்பின் அலையாய்
அடிக்கும் காற்றில் கொடுக்கும் உண்டோ ?
சோர்ந்து களைத்த சொகுசு வீடுகள்!
சார்ந்த சந்துகள் வழியே சுழலும்
சூறையின் முதுகில் சருகுச் சுமைகள்!

ஏறும் கோடை
இதுவே! இதுவே!!

வறண்ட உதட்டைத் திறந்து காட்டி
இறுகிய பூமியும் செருமிக் கூவி
வேதனைத் தனிமையை விம்மிக் கரையுதோ?
நீதிபோல் தழைத்த நெடுமரம், புல்செடி
கருகியும்; காய்ந்தும்; குனிந்து குமைந்தன!

பெருகிடும் கோடைப்
பருவம் இதுவே!!

சலசல அருவியில் சங்கீதம் இல்லை!
தொலைவு மலையும் சோம்பித் துயிலுதே!
சாயும் சூரியன் முகில்களுக் கெல்லாம்
சாயச் சிவப்பைத் தடவி வைக்குது!
அழகும் துயரமும் ஆக கலந்து

செறியும் கோடை
நாடகம் இதுவே!!

இனிய பழைய நினைவுகள் கோடி!
கனியும் புதிய காதலும் சிரிக்குது!
வைகாசிப் புன்னகை! ஆனிப் பிணைப்புகள்;
தொய்விலும் எழுச்சி! துயிலிலும் விழிப்பு!
தாண்டித் தாண்டிப் போகும் கால

ஆண்டுகள் தந்திடும்
வாழ்வுப் பரிசுகள்!!

## பிறந்துகொண்டே இரு!

நீ ...-
என் ஆத்மாவின்
புன்னாக வராளி!
ஆனந்த பைரவி!
உசேனி!
ஆகிரி!
ஆசாவேரி!
மாஞ்சி!
தன்யாசி!
சஹானா!
சிந்துபைரவி!
செஞ்சுருட்டி...!
ஆமாம் -
ராகங்கள் ஓய்வு கொள்ளும்போது
உன்வேஷங்களைப் போட்டுக் கொள்கின்றன?

நீ -
என்விழிக் குழிகளின்
வெளிச்சத்தில் குதிக்கும் போது
ரோஜாக் குடும்பங்களின்

ரூபமாகவோ
பிஞ்சுக் சூரியனின்
மாணிக்கச் சிரிப்பாகவோ -
தனிமையிலும் தனிமை கொண்டு
சாகும்போதே
பிறந்துகொண்டிருக்கும்
பிறைவற்றலின்
மெலின சவாலாகவோ -
மிதந்து மிதந்து
அழகை ருசிக்கச் சொல்லியோ -
வாழ்வின்
இருண்ட ரகசிங்களைத்
தொட்டுப் பார்த்தோ
அன்புக்கட்டளை இட்டோ -
கிசுகிசுக்கிறாய்!
நன்றி!
நாள்தோறும் இதைச்செய்...!
செய்துகொண்டே இரு..!

என்எண்ணங்கள்
வறுமையின் சூறாவளியால்
பசுமையான வஞ்சங்களின்
நச்சு நெடியால்
தாக்குண்டு
சோகையாகும்போது-
சோடையாகும்போது -
அவைகளுக்கு
'சாஸ்திர வைத்தியம்' செய்து

'சனாதன சிசுருஷை' செய்து;
தெம்பூட்ட முயலும்
எனது

சந்தர்ப்ப தோஷ
வைதீக உத்திகள் கூட
உன்வருகையால்
ஒடுங்கி ஓடி விடுகின்றனவே!
இது ஆச்சரியம் அல்லவா!
வசந்தங்களின் வர்ணங்களில்-
உனக்கு உற்வசம் நடக்கிறது:
அந்த உற்சவத்தில்
மனப்பூச்சோடு
ஊர்ந்து வந்து,
உவந்து வந்தே
என் இதயத்தின்
அகல நீளத்தில்
எத்தனை எத்தனை
சௌந்தர்யத் தொட்டில் கட்டி
ஆட்டுகிறாய்!

நீ -
பொதிகைப் பூங்காற்றாக
என்ஆயாச வியர்வைத் துளிகளைத்
துடைக்கும்
விநாடித் துளிகளில் எல்லாம்
நான் நிஜமாகவே வாழ்கிறேனே,
அது என்னடி அதிசயம்!

நீ சஞ்சீவி!
அறிவு நோய்களின்
அற்புத நிவாரணி!
தாய் வாஞ்சைபோன்ற-
தேனையும் விட-
நாட்பட நாட்பட
நீ-'நீ' யாகவே,
அமரத்துவத்துடன் இருக்கும்போது
கால விஷம்
உன்னைக் கடிக்கவே நடுங்குகிறதே!

நீ-'நீ' யாகவே-
நகலற்ற -
போலியற்ற-
மாற்றமற்ற-
உரு - உதிர
ஜீவமூச்சோடு,
உலவும்போது-
தன்பரிசாகக்
கடவுள்
தன் ஆயுளை
உனக்குத் தந்து மகிழ்கிறான்!

நீ-நீயாகவே
வீரமிடும் போது
'சத்திய'மும்
'தர்ம'மும்
உன் இரும்புக் கரங்களாகின்றன!

'நியாய இலட்சியங்கள்'
என்விசைக் கால்களாகின்றன!

இவைகள் அனைத்தும்
எனது
ஞான சொப்பனங்களில்
பேரதிர்ஷ்டமல்லாவா?

நீ
என்
மனநித்திரையை
கிள்ள வரும்போது
உன் முதுகில்தான்
எத்தனை எத்தனைக்
கிழவசந்தங்களால்
கிழிந்து விழுந்த
நினைவுக் கூளங்கள்!

ஆனால்-
அக்கூளக்
குப்பைகள்தானே
கர்ப்பத் தேத்திகளில்
மொக்குமுகை விரிக்கப்போகும்
ஜோதித் தோட்டங்களின்
வேர் உரம்!

உன்னால் கூளங்கள்
தூசி தும்பட்டைகள் யாவுங்கூடக்

கனக புஷ்பங்களாக-
கால நட்சத்திரங்களாக-
ஆகிவிடுகின்றனவே!
உன்
தொண்டின் தொடர்ச்சியில்
இது
ஒரு சூட்சமம்!

விக்ரக அழகுகளின்
நீ -
விளையாடும் லீலைகளைவிட
'விலகும் அழகுகளில்-
வெறும் இருட்டுப் பரப்பில்
ரூபக் கோணல்களில் கூடத்
தூய்மையான ஆத்மாவின்
தூலகரீகரமாக
நீ வடிவெடுப்பது
எனக்கு மட்டும்
எப்படியோ தெரிகிறதே
என்ன விந்தை இது...?

ஏனோ
'உதய'ங்களில்
உறைவதை விட
'அஸ்தமன' ங்களில்
அமர்ந்திருப்பதை
நீ எப்போதுமே
அதிகமாக விரும்புகிறாய்.

அதுவும் சரிதான்!
ஏன் என்றால்
நீ எப்போதுமே
அவலக் கண்ணீரின்
ஆசைத் தோழி!
வெப்பமூச்சுகளின்
அந்தரங்க உபகாரி!

நீ,
தத்துவங்களின்
பாடிவீடு!
நழுவிக் கொண்டவர்களின்
மாடிவீடு!

நீ -
சுயரூபி அல்ல!
சாகும் வரை இருக்கும்-
சலித்து அலுத்துப் போகும்-
ஒற்றை ஒரு
உருவினளாகவே
இல்லாத
'இஷ்ட ரூபி!' இது -
நீ பெற்ற
ஈடு இணையற்ற மகாவரம்!

இந்த வரம்
அமர வர்கத்தின்
தெய்வ வீடுகளில்

நீ -
தேடித் திரிந்து
வாங்கிய பிச்சை!

இந்தப் பிச்சைதான்
மானுட சந்தோஷத்துக்கும்
சாந்திக்கும் கிடைத்த
மாயா தான
அமுத சுரபி!
அல்லவா...?

நீ -
சுந்தரி...!
புழுக்கைப் புழுதியில்
புரண்டாலும்
போதைக் கோப்பைகளில்
மாணிக்கக் கரைசலின் மேல்-
நுரைக்கும்
வெண்குமிழ்களாகச்
சுழன்றாலும்
நீ -
சுந்தரி மட்டுமல்ல;
சுதந்திரியுங் கூட!

சர்வ சட்ட நீதி
சம்பிரதாயங்களையும்
உன்
சயனமஞ்சத்தின்

சதுர மூலைக்
கால்களாக ஆக்கும் அளவுக்கு
அதிகாரம் படைத்த
ஆணவக் காரியுங்கூட!

இந்த ஆணவம் இருக்கிறதே,
இதுதானடி,
எனது
ஏக மொத்த பலம்!
எதிர்த்தசைக்க முடியாத
அன்னியம!
எதனையும்
என்னளவில்
'பலவீன'மாக்கிப் பார்க்கும்
மந்திரக்கோல்!

என்னைப் பொறுத்தவரை
உன்னைவிடப்
பெரிய
விருந்தாளி
வேறுயாருமே இல்லை!
ஆனால்-
இதிலும் ஒரு அதிசயமடி
ஆமாம்
விருந்தாட வரும்
நீ தான்
வீட்டுக்காரனான
எனக்கு

விருந்து படைக்கிறாய்!
தருபவள் நீ...!
பெறுபவன் நான்!
இது வேடிக்கைதானே...!


நீ
நீயாகவே வந்து
என்னுள்
நானாகி விடும்போது
நான்
நோயாளி அல்ல!
நொந்தவன் அல்ல!
நொடித்துப் போனவனும் அல்ல!
நூறுமுறை தோற்றவனும் அல்ல!
நூறாயிரம் முறைகள்
வெல்லப் போகும்
வீர வித்தகன்!

என்
சுவாசக் கவிதையே!

என்
மர்மப் புன்னகைகளின்
வித்துமுளையே!
நீ,
'நீ'யாகவே
கணங்கள் தோறும்
தார்மீக அருளையே

நிரந்தரத்
தாய்வயிறாகக் கொண்டு
பிறந்து கொண்டே இரு!
என்தமிழ் வடிவங்களாகவே
அலை கடந்து-
மலை கடந்து
அவனி உலாவரும்
ஆனந்தக் குழந்தைகளாக
பிறந்துகொண்டே இரு...!

நீ -
பிறந்துகொண்டே இரு...!



தமிழுக்கும்
தமிழருக்கும்
தமிழகத்துக்கும்
தாங்கள்
ஏதாவது செய்திட
வேண்டுகிறேன்.
தங்கள்
எழுத்தாற்றல் கொண்டு.

*முத்தமிழறிஞர்*
*தமிழக முதல்வர்*

**டாக்டர் கலைஞர்**